## பத்திரிக்கைச் செய்தி

## பஞ்சாயத்து அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ரசீதிற்கு உண்டான தொகையினை அரசிடமிருந்து பெற்றுத்தர லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக பொறியாளர் அவர்களுக்கு 4 வருட சிறை தண்டனையும் அபராதம் ரூ.5,000/- விதித்து தீர்ப்பு

2006ம் ஆண்டு திரு.பாலன், தனியார் காண்டிராக்டர் குன்னூர் பஞ்சாயத்தில் காண்டிராக்ட் தொழில் செய்து வந்தார். 2006ம் ஆண்டு இவர் வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் (Sampoorna Grameen Rozgar Yojana Scheme) செய்த வேலைக்கு ரூ.1,50,000/-க்கு குன்னூர் பஞ்சாயத்தில் ரசீது சமர்ப்பித்துள்ளார். ரசீதினை பரிசீலனை செய்து ரசீதிற்கு உண்டான தொகையினை அரசிடமிருந்து பெற்று வழங்க திரு.வெங்கடேஷ், யூனியன் பொறியாளர், (பணி இடை நீக்கம்) பஞ்சாயத்து யூனியன், குன்னூர், நீலகிரி மாவட்டம் என்பவர் தனக்கு லஞ்சமாக ரூ.10,000/- யை கொடுக்குமாறு கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத புகார்தாரர் நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் திரு.வெங்கடேஷ் அவர்கள் மீது புகார் மனு அளித்தார். இதன் பேரில் நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு திரு.வெங்கடேஷ், யூனியன் பொறியாளர் அவர்களை புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.10,000/-யை பெற்ற போது கைது செய்தனர். மேலும் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது நீலகிரி மாவட்டம் உதவி அமர்வு நீதிமன்றம்/சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இன்று 13.12.2022 இவ்வழக்கில் கணம் நீதிபதி அவர்கள் திரு.வெங்கடேஷ், குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கி, திரு.வெங்கடேஷ் புகார்தாரரிடம் ரூ.10,000/- லஞ்சம் கேட்டு பெற்ற குற்றத்திற்கு 4 வருடம் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.5,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.